
# வித்யாமலர்

**SECOND EDITION - ACADEMIC YEAR 2019-2020**






Published by

# Vidyarambam Trust

Old No: 85/New No: 94, Park View Apartment, G.N.Chetty Road, T.Nagar, Chennai – 600 017

# நிகழ்வுகள்

## திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம்



**20.11.2019** அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் விஜய அச்சம்பாடு கிளை அலுவலகத்தில் வைத்து **2nd Term Follow up Training** மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. முத்துச்செல்வி, திருமதி. சிவசாந்தகுமாரி அவர்களால் கொடுக்கப்பட்டது. பயிற்றுனர்கள், மதிப்பீட்டாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். தமிழ்த்தாய் வாழ்த்துடன் பயிற்சி ஆரம்பமானது. பின் warm up செய்யப்பட்டது. பாடல்கள் பாடப்பட்டது.

**21.11.2019** அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் வட்டவிளையில் வைத்து **follow up training** மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. முத்துச்செல்வி மற்றும் செல்வி. சிவகாமி அவர்களால் கொடுக்கப்பட்டது. இதில் பயிற்றுனர்கள் கலந்துகொண்டனர்.






**26.11.2019** முதல் **29.11.2019** வரை ELE மாணவர்களுக்கு **Mid Test** வைக்கப்பட்டது.



(VI STD ,VII STD, VIII STD) மாநில ஒருங்கிணைப்பாளர் திருமதி. பிரபாவதி அவர்கள் **ELE மையங்களுக்கு MID Test** மற்றும் VT மையங்களை மேற்பார்வையிட்டார்.







**16.12.2019** முதல் **20.12.2019** VT மையங்களில் **பெற்றோர் கூட்டம்** நடைபெற்றது. (கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு தொடக்கப்பள்ளி, குண்டல், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சின்ன மூலக்கரை, காரியாண்டி, உவரி, மடப்புரம் தொடக்கப்பள்ளிகள் )





**21.12.2019** மற்றும் **22.12.2019** ஆகிய நாட்களில் நாகப்பட்டினம் RVS School ல் வைத்து **3rd Term Training** நடைபெற்றது.





25.12.2019 நமது **அறக்கட்டளையின் நிறுவனர் திரு. V. ரெங்கநாதன் ஐயா அவர்களின் நினைவு நாளை** விஜய அச்சம்பாடு கிராமத்தில் உள்ள வித்யாரம்பம் கிளை அலுவலகத்தில் வைத்து அனுசரிக்கப்பட்டது.

**26.12.2019, 27.12.2019** மற்றும் **28.12.2019** ஆகிய நாட்களில் விஜயஅச்சம்பாடு கிளை அலுவலகத்தில் வைத்து **ஆசிரியர்களுக்கு பயிற்சி** நடைபெற்றது. இதில் மாநில ஒருங்கிணைப்பாளர் திருமதி. வே. பிரபாவதி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முத்துசெல்வி, மதிப்பீட்டாளர்கள், துணை ஒருங்கிணைப்பாளர்கள், விளையாட்டு வாகன ஊர்தி பயிற்சியாளர்கள், ELE ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுனர்களும் கலந்து கொண்டார்கள்.









03.01.2020 மற்றும் 04.01.2020 ஆகிய நாட்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் வட்டவிளை கிராமத்தில் அரசு நடு நிலைப்பள்ளியில் வைத்து திருமதி. வே. பிரபாவதி, முத்துசெல்வி மற்றும் டாரணிசாந்தி ஆகியோரால் **ஆசிரியர்களுக்கு பயிற்சி** கொடுக்கப்பட்டது. இதில் பயிற்றுனர்கள் கலந்துகொண்டார்கள்.

**20.01.2020** மாநில ஒருங்கிணைப்பாளர் திருமதி. பிரபாவதி அவர்கள் திருமலாபுரம் VT மையங்களை மேற்பார்வையிட்டார்.

வள்ளியம்மாள்புரம் TDTA Middle school ல் **விளையாட்டு ஊர்தியில் உள்ள அறிவியல் மற்றும் கணிதம் சார்ந்த கற்றல் உபகரணங்களை குழந்தைகள் பயன்படுத்தி மகிழ்ந்தனர்.** விளையாட்டு வாகன ஊர்தி பயிற்சியாளர்கள் குழந்தைகள் விளையாட உதவி செய்தனர்.

**18.02.2020 முதல் 25.02.2020** வரைகன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அகதீஸ்வரம், குண்டல், வட்டவிளை மற்றும் கன்னியாகுமரி ஆகிய கிராமங்களில் உள்ள மையங்களையும், திருநெல்வேலி மாவட்டத்தில் முனைஞ்சிப்பட்டி, இட்டமொழி மற்றும் விஜய அச்சம்பாடு மையங்களையும், நவ்வலடி, விஜய அச்சம்பாடு, திசையன்விளை ஆகிய கிராமங்களில் உள்ள பள்ளிகளில் ELE மையங்களையும் மாநில ஒருங்கிணைப்பாளர் திருமதி பிரபாவதி அவர்களால் பார்வையிடப்பட்டது.

மார்ச் முதல் இரண்டு வாரங்களில் **Post test மற்றும் ELE final test** வைக்கப்பட்டது.

# தூத்துக்குடி மாவட்டம்

**26.11.19** அன்று ELE மைய மாணவர்களுக்கு **Mid Test** நடைப்பெற்றது. அதை தொடர்ந்து Correction செய்து மாணவர்களுக்கு கற்று தரப்பட்டது.



**12.12.19** முதல் **13.12.19** வரை சீர்காழி கிளை அலுவகத்தில் திருமதி. கார்த்திகா மேடம் தலைமையில் **Syllabus & literature correction** செய்யப்பட்டது. அனைத்து ஒருங்கிணைப்பாளர்களும் கலந்து கொண்டார்கள்.





**15.12.19** அன்று சங்கரன்கோவில கிளை அலுவலகம் கணபதிநகர் 5ம் தெரு என்ற முகவரிக்கு மாற்றப்பட்டு. **01.01.20** அன்று முதல் புதிய அலுவலகத்தில் செயல்பட தொடங்கியது.



**25.12.19** அன்று அலுவலகத்தில் திரு. V. ரெங்கநாதன் ஐயா அவர்களின் 4-வது நினைவுநாள் சங்கரன்கோவில் வித்யாரம்ப அலுவலக தொண்டர்களால் அனுசரிக்கப்பட்டது. அவரின் கனவு நினைவாக செயல்படுவோம் என தொண்டர்களால் உறுதியெடுக்கப்பட்டது.

**27.12.19, 28.12.19, 30.12.19** ஆகிய மூன்று தினங்களில் **KIDS, SCJ, SCS மைய ஆசிரியர்களுக்கு III TERM பயிற்சி ஆரம்பமானது.** இதில் பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர். வித்யாரம்ப பயிற்சிகளை பயன்படுத்தி தமிழ், ஆங்கிலம், கணிதம் கற்பிக்கப்பட்டது. மேலும் **08.01.20, 11.01.20, 13.01.20** ஆகிய மூன்று தினங்களில் விடுபட்ட பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர்.









**09.01.20, 10.01.20** ஆகிய இருதினங்கள் மதுரை மாவட்டம் சுந்தராஜன்பட்டி கிராமத்தில் வைத்து **III TERM TRAINING** நடைபெற்றது. ஆசிரிய மதிப்பீட்டாளர் திருமதி. S. ரேவதி மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். வித்யாரம்ப பயிற்சிகளை பயன்படுத்தி தமிழ், ஆங்கிலம், கணிதம் கற்பிக்கப்பட்டது.

**19.02.20, 20.02.20** ஆகிய இருதினங்களில் **KIDS, SCJ, SCS மைய ஆசிரியர்களுக்கு III TERM FOLLOW UP TRAINING** ஆரம்பமானது. மைய பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர். வித்யாரம்ப பொருள்களை பயன்படுத்தி தமிழ், ஆங்கிலம், கணிதம் எவ்வாறு கற்பிக்கப்பட்டது என கேட்டறியப்பட்டது. மேலும் பொம்மலாட்டபயிற்சி நடைப்பெற்றது.







**02.03.20** அன்று முதல் **11.03.20** வரை சங்கரன் கோவில் வட்டம் மற்றும் மதுரை மாவட்ட மைய குழந்தைகளுக்கு Post test வைக்கப்பட்டது. மேலும் **ELM மைய குழந்தைகளுக்கு 12.03.20 அன்று Post test வைக்கப்பட்டது.**

**04.03.20, 05.03.20** ஆகிய இருதினங்கள் மதுரை மாவட்டம் சுந்தராஜன்பட்டி கிராமத்தில் வைத்து **III TERM FOLLOW UP TRAINING** நடைபெற்றது. திருமதி. பிரபாவதி மேடம் தலைமையில், திருமதி. கோமதி, திருமதி. பாக்கியலெட்சுமியுடன் 7 மைய ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். மேலும் புதிய NGO திருமதி. உமாமகேஸ்வரி தலைமையில் 4 தொண்டர்களும் கலந்து கொண்டனர். வித்யாரம்ப பொருள்களை பயன்படுத்தி தமிழ், ஆங்கிலம், கணிதம் எவ்வாறு குழந்தைகளுக்கு கற்பிக்கப்பட்டது என 7 மைய ஆசிரியர்களும் விளக்கி நடத்தினார்கள்.





13.03.20 அன்று திருமதி. கார்த்திகா மேடம் தலைமையில் திருமதி. கோமதி மற்றும் திருமதி. பாக்கியலெட்சுமி நாகைப்பட்டினத்தில் RVS பள்ளி குழந்தைகளுக்கு ஓவியம் வரைவது மற்றும் அதன் நுணுக்கங்கள் கற்றுத்தரப்பட்டது. மகிழ்ச்சி மற்றும் ஆர்வமுடன் கற்றுக்கொண்டனர். அன்று மதியம் ஓவியப்போட்டி நடைப்பெற்றதில் நுணுக்கங்களை பயன்படுத்த தொடங்கியிருந்தனர்.









16.03.20 அன்று வெள்ளப்பனேரி மற்றும் சுப்புலாபுரம் பள்ளிகளில் **ELE மைய மாணவர்களுக்கு Final Test** நடைப்பெற்றது. அதை தொடர்ந்து Correction செய்யப்பட்டது.







**27-11-19** முதல் 06-12-19 வரை **ELE Mid test** திருச்சி மாவட்டத்திலும், 3-12-19 அன்று திண்டுக்கல் மாவட்டம் தேவாரப்பன்பட்டி கிராமத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளியிலும் **ELE Mid test** திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் **திருமதி. ரோஸி மரியாள் மற்றும் திருமதி. ஹேமா** அவர்களால் நடத்தப்பட்டது.





21-12-19 மற்றும் 22-12-19 இரு நாட்களும் **திருமதி. பிரேமா மேடம், திருமதி. ஸ்ரீமதி மேடம், திருமதி. கார்த்திகா மேடம், திருமதி. ஆனந்தி மேடம்** தலைமையில் நாகப்பட்டினம் **RVS பள்ளியில் III Term training** அளிக்கப்பட்டது. இதில் RVS பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் கலந்துகொண்டனர்.



03-01-20 மற்றும் 04-01-20 ஆகிய இருநாட்களும் திண்டுக்கல் அய்யம்பாளையம் மெயின் பள்ளியில் **III Term training** திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் திருமதி. ரோஸி மரியாள் மற்றும் திருமதி. ஹேமா அவர்களால் அளிக்கப்பட்டது. இதில் அனைத்து பயிற்றுனர்களும் கலந்துக்கொண்டனர்.



06-01-20 முதல் 08-01-20 வரை மூன்று தினங்களும் திருச்சி மாவட்ட கிளை அலுவலகத்தில் **III Term training** அளிக்கப்பட்டது. இதில் அனைத்து பயிற்றுனர்களும் கலந்துக்கொண்டனர்.

20-1-20 மற்றும் 21-1-20 ஆகிய இருநாட்களும் **RVS பள்ளியை திருமதி. பிரேமா மேடம் மற்றும் திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. ரோஸி மரியாள்** ஆகிய இருவரும் இணைந்து அனைத்து வகுப்புகளையும் பார்வையிட்டனர்.

**05-02-20** மற்றும் **06-02-20** ஆகிய இருநாட்களும் திண்டுக்கல் அய்யம்பாளையத்தில் மெயின் பள்ளியை **திரு. தாமோதரன் அவர்கள்** அவருடைய குடும்பத்தினருடன் சேர்ந்து மையங்களை பார்வையிட்டார்.

**02-03-20** மற்றும் **03-03-20** அன்று திண்டுக்கல் தேவாரப்பன்பட்டி கிராமத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் திரு. தாமோதரன் சார் மற்றும் அவருடைய குடும்பத்தினர் மற்றும் Foreigners தலைமையில் **Annual Meet** நடைபெற்றது. அதில் நமது அறக்கட்டளையின் **General Manager** **திருமதி. விஜி ஸ்ரீநிவாசன் மேடம்** விழாவில் கலந்துக்கொண்டார். இவர்களுடன் திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும் கலந்துக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் நமது வித்யாரம்ப பயிற்றுநர்கள் அனைவரையும் பாராட்டி **திரு. தாமோதரன் சார்** பரிசுகளை வழங்கினார்.

மேலும் நமது வித்யாரம்ப அனைத்து உபகரண பொருட்களையும் அனைவருக்கும் **திருமதி. விஜி ஸ்ரீநிவாசன் மேடம்** அறிமுகப்படுத்தி நாம் எவ்வாறு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதையும் ஆங்கிலத்தில் தெளிவாக விளக்கி கூறினார்.











**04-03-20** முதல் **13-03-20** வரை அனைத்து **VT மையங்களுக்கான Post test எடுக்கப்பட்டது,**

**16-03-20** அன்று **ELE Final test** **( வந்தலை கூடலூர் மற்றும் காணக்கிளியநல்லூர் )** ஆகிய இரண்டு உயர்நிலைப் பள்ளிகளில் மட்டும் தேர்வுகள் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிறகு கொரோனா வைரஸ் பரவுதலின் காரணமாக பள்ளிகள் விடுமுறை அளிக்கப்பட்டதால் நமது தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டது.

# அரியலூர் மாவட்டம்



**02.12.2019** முதல் **05.12.2019** வரை 7ஆம் மற்றும் 8ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு **ELE Mid test** வைக்கப்பட்டது.



**12.12.2019** மற்றும் **13.12.2019** அன்று சீர்காழி அலுவலகத்தில் கார்த்திகா மேடம் அவர்களின் முன்னிலையில் அனைத்து ஒருங்கிணைப்பாளர்களும் கலந்து ஆலோசித்து VT மையத்தின் பாடத்திட்ட கையேடு சரி செய்யப்பட்டது.

**21.12.2019** மற்றும் **22.12.2019** அன்று நாகை வித்யாரம்பம் பள்ளியில் அவர்களின் முன்னிலையில் **III-term training** எடுத்துக்கொள்ளப்பட்டது.







03.01.2020, 04.01.2020 மற்றும் 05.01.2020 அன்று **Kids, SCJ, SCS** மைய ஆசிரியர்களுக்கு **III-term training** நடத்தப்பட்டது. அதில் அனைவரும் கலந்துக்கொண்டு பயிற்சி எடுத்துக்கொண்டனர்.



10.02.2020 முதல் 14.02.2020 வரை 2-வது முறையாக **VDG Parents Meeting** அந்தந்த கிராமங்களில் நடத்தப்பட்டது. அதில் மாணவர்களின் பெற்றோர்கள் கலந்துக்கொண்டு அவர்களின் கருத்துக்களை தெரிவித்தனர்.



22.02.2020 அன்று மைய ஆசிரியர்களுக்கு **III-term Followup training** நடத்தப்பட்டது. அதில் அனைவரும் கலந்துக்கொண்டு தங்களது மையத்தின் விபரங்களை பகிர்ந்து கொண்டனர்.





09.03.2020 முதல் 13.03.2020 வரை VT மற்றும் **ELM மையங்களுக்கு Post test** எடுக்கப்பட்டது.

16.03.2020 அன்று ELE மாணவர்களுக்கு **Final test** வைக்கப்பட்டது.

# நாகப்பட்டினம் மாவட்டம்



27.11.2019 முதல் நான்கு பள்ளிகளில் நடைபெறும் **ELE மைய மாணவர்களுக்கு Mid Test வைக்கப்பட்டது.** அதை தொடர்ந்து Paper Correction செய்யப்பட்டது.



07.12.2019 அன்று எருக்கட்டாஞ்சேரியில் உள்ள **SVS** பள்ளியின் அனைத்து ஆசிரியர்களுக்கும் நமது வித்யாரம்ப பொருட்களை பயன்படுத்தி **பயிற்சிகள் அளிக்கப்பட்டது.**



12.12.2019 முதல் 13.12.2019 வரை சீர்காழி கிளை அலுவகத்தில் திருமதி. கார்த்திகா மேடம் தலைமையில் **literature Review correction** செய்யப்பட்டது. அனைத்து ஒருங்கிணைப்பாளர்களும் அவர்களுடைய கருத்துக்களை கூற **literature correction** செய்யப்பட்டது.



25.12.19 அன்று சீர்காழி அலுவலகத்தில் **திரு. V. ரெங்கநாதன் ஐயா** அவர்களின் 4-வது நினைவு நாள் வித்யாரம்பத்தின் அனைத்து தொண்டர்களும் அனுசரிக்கப்பட்டது.



03.01.2020 முதல் 06.01.2020 ஆகிய தினங்களில் **KIDS, SCJ, SCS மைய ஆசிரியர்களுக்கு III TERM** பயிற்சி ஆரம்பமானது. இதில் வித்யாரம்ப பொருட்களுக்காக பயிற்சியும் கொடுக்கப்பட்டது. பிரேமா டேனியல் மேடத்தின் குழந்தை வளர்ச்சி புத்தகத்தில்

உள்ள செயல்பாடுகளை ஆசிரியர்களுக்கு சொல்லிக்கொடுக்கப்பட்டது.

**08.01.2020** அனைத்து மையங்களிளும் விதைகள் போடப்பட்டது. அதில் நெகிழிகள் கலந்த மண்ணில் உள்ள விதைகள் முளைக்கவில்லை.







காய்ந்த தழைகளை உரமாக கொண்ட மண்ணில் உள்ள விதைகள் நன்றாக முளைத்திருந்தன.





**31.01.2020** அன்று அனைத்து மையங்களிளும் **Science Activity** நடைப்பெற்றது.



**06.02.2020** அன்று நமது மையம் நடைபெறும் கண்ணாங்குளம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் **உணவு**

**திருவிழா** நடைப்பெற்றது அதில் நமது சீர்காழி கிளையின் ஒருங்கிணைப்பாளரும் மற்றும் மதிப்பிட்டாளரும் கலந்துக்கொண்டனர்.



18.02.2020 அன்று நமது மையம் நடைபெறும் உள்ள பள்ளிகளில் **VDG Meeting** நடைப்பெற்றது.

22.02.2020 அன்று மைய ஆசிரியர்களுக்கான **Follow Up Training** நடைபெற்றது. இந்த **Training – ல் மையத்தில்** நடத்தும் வித்யாரம்ப பொருள்களில் ஏற்படும் சந்தேகங்களுக்கும், பாடத்திட்டத்திலுள்ள செயல்பாடுகளுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் மையத்திற்கு குறித்தநேரத்தில் செல்வதற்கும், ஒவ்வொரு நாளும் குழந்தைகளுக்கு பாடல்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. ஒவ்வொரு வாரத்தில் உள்ள வெள்ளி கிழமைகளில் வித்யாரம்பம் உபகரணங்களை கொண்டு Activity செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது. மேலும் VDG Meeting ல் அனைத்து குழந்தைகளின் பெற்றோர்களும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று ஆசிரியரிடம் கேட்டு கொள்ளப்பட்டது.



27.02.2020 அன்று கீழமாத்தூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் வரும் ஆண்டிற்கான வித்யாரம்ப வகுப்புகள் ஆரம்பிப்பதற்கான ஆலோசனை கூட்டம் **திரு. சந்திரமௌலி** Sir அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது. அதில் அப்பள்ளியின் ஆசிரியர்களும் மற்றும் வித்யாரம்பத்தின் Project Director T. Karthika Madam அவர்களும் கலந்துக்கொண்டார்கள்.



02.03.2020 அன்று Smiley Micro Finance Zonal Manager

**Mr. R. Devendran** Sir அவர்கள் ஆலவேலி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெறுகின்ற நமது வித்யாரம்ப மையங்களான KIDS, SCJ, SCS வகுப்புகளை பார்வையிட்டார்கள்.



02.03.2020 அன்று **SCJ, SCS மையங்களுக்கு Post Test Report** எடுக்கப்பட்டது.



12.03.2020 அன்று **ELE மைய மாணவர்களுக்கு Final Test** நடைப்பெற்றது. அதை தொடர்ந்து Paper Correction செய்யப்பட்டது.

## ராமநாதபுரம் மாவட்டம்





09.11.2019 – 16.11.2019 ஆகிய நாட்களில் பயிற்றுனர்களுக்குபின் தொடர் பயிற்சி பசுமை இராமேஸ்வரம் அலுவலகத்தில் வைத்து கொடுக்கப்பட்டது. இப்பயிற்சியில் ஆரம்ப கட்டமாக

இறை வணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து உடற்பயிற்சி மற்றும் பாடல்கள் பாடப்பட்டது. அதன்பின் பயிற்றுனர்கள் அவர்களின் அனுபவங்கள் மற்றும் குழந்தைகள் செயல்பாடுகள் பற்றியும் குழந்தைகளுக்கு என்னென்ன கற்றுக்கொடுக்கவேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்டது.



ஏரக்காடு, சின்னபாலம், மெய்யம்புளி, காந்திநகர், இராமேஸ்வரம் எண். 2, தங்கச்சிமடம், சின்னபாலம், பாம்பன், சம்பை மற்றும் அக்காள்மடம் ஆகிய கிராமங்களில் உள்ள பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் கிராம முன்னேற்ற கூட்டம் நடைபெற்றது. குழந்தைகள் உபகரணங்கள் மூலம் செயல்பாடுகள் செய்து காட்டினார்கள்.





07.12.2019 – 09.12..2019 ஆகிய நாட்களில் பயிற்றுனர்களுக்கு மறு ஆய்வு கூட்டம் பசுமை இராமேஸ்வரம் அலுவலகத்தில் வைத்து நடைப்பெற்றது. இப்பயிற்சியின் ஆரம்ப கட்டமாக இறை வணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து உடற்பயிற்சி மற்றும் பாடல்கள் பாடப்பட்டது.







09.01.20120 மற்றும் 10.01.2020 ஆகிய நாட்களில் **பசுமை இராமேஸ்வரம் அலுவலகத்தில் வைத்து** பயிற்றுனர்களுக்கான மூன்றாம் பருவபயிற்சியும், 08.02.2020 அன்று பின்தொடர் பயிற்சியும்,13.03.2020 அன்று மறு ஆய்வு கூட்டமும் நடைபெற்றது. இதில் பயிற்றுனர்களும் ஒருங்கிணைப்பாளர், பயிற்சியாளர் மற்றும் மதிப்பீட்டாளர்கள் கலந்துகொண்டார்கள்.

இறைவணக்கத்துடன் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் **warm-up ம் பாடல்களும்** பாடப்பட்டது. பயிற்றுனர்களின் பின்னூட்டம் (feedback) பேசப்பட்டது.



அதன் பின்பு சமச்சீர் பாடங்களை நமது உபகரணங்கள் மூலமும்,**Flash cards** மூலமும் பயிற்சிகொடுக்கப்பட்டது. 13.03.2020 அன்று மறு ஆய்வு கூட்டத்தில் கருனா டிரஸ்ட் திட்ட மேலாளர் திரு. ராமன் அவர்களும், காந்திகிராம் டிரஸ்ட் திட்ட மேலாளர். திரு. சந்திரசேகரன் அவர்களும், மண்டபம் ஒன்றிய வட்டாரகல்வி அலுவலர் திருமதி. சுதாமதி அவர்களும் கலந்து கொண்டு நல்ல கருத்துக்களை எடுத்துரைத்தார்கள்.

14.02.2020 அன்று சத்வா திட்ட தணிக்கை நிறுவனத்தைச் சார்ந்த **திரு. அசீர் அவர்களும், திருமதி. பார்வதி அவர்களும் நமது மையங்களை பார்வையிட்டனர்.** வடகாடு, ராமேஸ்வரம், மற்றும் தங்கச்சிமடம் மையங்களையும் பார்வையிட்டார்கள். பயிற்றுனர் பாடம் நடத்தும் முறை மற்றும் குழந்தைகளின் திறன் மற்றும் மதிப்பிட்டாளரின் பணி என்ன? ஒருங்கிணைப்பாளர் பணி என்ன? என ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக கலந்துரையாடினார்கள். மையத்தின் செயல்பாடுகள் பற்றி தலைமை ஆசிரியருடனும் பேசினார்கள்.



மையங்களை பார்வையிட்டார்கள்.

**கொரோனாவைரஸ் பற்றி விழிப்புணர்வு 22 கிராமங்களில்** கொடுக்கப்பட்டது.





## சென்னை மற்றும் மறைமலைநகர்



02.11.2019அன்று திருமதி பிரேமா மேடம் மற்றும திருமதி ஸ்ரீமதி மேடம் தலைமையில் 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான **ELE இரண்டாம் பருவத்திற்கான** பாடங்கள் செயல்முறை விளக்கத்துடன் சென்னை, மறைமலைநகர் ஆசிரியர்களுக்கு சென்னை அலுவலகத்தில் பயிற்சி அளிக்கபட்டது.



05.11.2019 அன்று **Madras Dyslexia Association (MDA) நிறுவனத்திலிருந்து திருமதி. ஹரிணி மற்றும் திருமதி. பத்மா அவர்கள் பெருக்கல், வகுத்தல், இடமதிப்பு, பின்னங்கள்** போன்ற கணக்குகளுக்கு எளிய செயல்முறை பாடங்களை நடத்தி காண்பித்தனர். இதில் சென்னை **ELM**

ஆசிரியர்கள் பாத்திமா மற்றும் ஷர்மிளா கலந்து கொண்டனர்.



03.12.2019 திருமதி. பிரேமா மேடம் மற்றும் திருமதி ஸ்ரீமதி மேடம் தலைமையில் OPEN நிறுவனத்திலிருந்து திரு. ஸ்ரீதர் சொக்கலிங்கம் மற்றும் திருமதி வித்யா அவர்கள் சென்னை அலுவலகத்திற்கு வருகை தந்தனர். இதில் சென்னை மையத்திற்கான பாட திட்டங்கள் மற்றும் செய்முறைகளையும் அதற்கான விளக்கங்களையும் கேட்டு அறிந்தனர்.



25.12.2019 அன்று வித்யாரம்பம் அறக்கட்டளையின் நிறுவனர் **திரு. ரெங்கநாதன் அவர்களின் நினைவு நாள்** அனுசரிக்கப்பட்டது.



08.01.2020 அன்று 1 முதல் 5 ஆம் வகுப்பிற்கான **ஆங்கில பாடபயிற்சி செயல்முறை விளக்கத்துடன்** ஆசிரியர்களுக்கு கற்று கொடுக்கப்பட்டது. ஆசிரியர்கள் பாடபயிற்சியின் செயல்முறைகளை செய்துகாட்டினர்.



11.01.2020,13.02.2020,23.02.2020 ஆகிய தேதிகளில், 6 முதல் 8ஆம் வகுப்பின், மூன்றாம் பருவத்திற்கான **ELE பாடபயிற்சிகள்** செயல்முறை விளக்கத்துடன் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் மறைமலைநகர் மைய ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.



நன்றி

Editor: Coordinators
(For private circulation only)

Vidyarambam Trust
Park View Apartments, II floor,
No: 85/94, G.N.Chetty Road,
T.Nagar, Chennai – 600 017

Website: www.vidyarambam.org
Phone: 044 -28152590
Email: vidyarambam@gmail.com